# கவிதையின் நுண்ணுணர்வு – அப்துல்ரகுமான் வழி

*முனைவர் ஜோ.சரவணன்,*

*தமிழ் உதவிப்பேராசிரியர்,*
*தமிழியல் உயராய்வுத் துறை, அரசு கலைக் கல்லூரி,*
*உதகமண்டலம்-643002.*

**ஆய்வுச் சுருக்கம்**

*அப்துல் ரகுமான தமிழ் உலகம் அறிந்த கவிஞர் என்றாலும் அவரைப் பற்றிய முழுமையானச் செய்திகள் அவரின் இறப்பிற்குப் பின்பே தெரிந்து கொள்ளும் படியாக அமைந்தது . மேலும் பித்தன் கவிதைத் தொகுப்பானது அவரின் தனித்துவ ஆன்மீக உலகை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக அமைந்ததுடன் அக்கவிதைத் தொகுப்பு அவரை தமிழ் இலக்கிய உலகில் அழியாத இடத்தையும் வழங்கியது . அதனளவில் இங்கு பித்தன் என அறிமுகப்படுத்தப்படுகிறது.*

**கலைச்சொற்கள்**

*உவமைகள், உருவகங்கள், படிமங்கள், குறியீடுகள், பித்தன், சமூகம், ஹைக்கூ, கஜல்.*

**முன்னுரை**

*அப்துல் ரகுமான், கவிக்கோ என்று சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறார். 'வானம்பாடி' இயக்கக் கவிஞர்களோடு இணைந்தியங்கியவர். எழுதுபவர்களின் தலைவாயிலில் தம் கவிதை வெளியீடுகளின் வாயிலாகப் புதுக்கவிதைத் துறையில் நிலைநிறுத்திக் கொண்டவர்களுள் அப்துல் ரகுமான் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் ஆவார். அவர் பால்வீதி என்ற கவிதைத் தொகுதி மூலம் தம்மை ஒரு சோதனைப் படைப்பாளியாக இனங்காட்டிக் கொண்டார். தமிழில் கவிதைக் குறியீடுகள் குறித்து ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர். தமிழில் ஹைக்கூ, கஜல் ஆகிய பிறமொழி இலக்கியங்களை முனைந்ததிலும் பரப்பியதிலும் இவர் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவருடைய பித்தன் கவிதைத் தொகுப்பு வெளிவந்த போது கவிதையை நேரடியாகத் தராமல் உவமைகள், உருவகங்கள், படிமங்கள், குறியீடுகள் ஆகியவற்றின் வழி, வெளியீட்டு முறையின் பின்புலம் இங்கு அழகியல் வடிவமாக முன்னெடுக்கப்படுகிறது.*

**கவிதைத்தன்மை அறிமுகம்**

*‘கவிக்கோ’ என்றால் உலகம் முழுவதும் அறியப்பட்ட கவிஞர் அப்துல் ரகுமான் . கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள் ‘பித்தன்’ என்ற நூலில், சித்தர்கள் போல கவிதை எழுதி உள்ளார் என்பதே அந்தத் தொகுப்பின் சிறப்பினைச் சொல்லும் எனலாம். இதில் 27 தலைப்புகளில் கவிதைகள் உள்ளன. இத் தொகுப்பைப் பற்றி , **"இந்தப் பித்தன் என்ற கவிதைத் தொகுப்பு ... எதிர்மறையாக எல்லாவற்றையும் சொல்வது என்கிற முடிவோடு சொல்லப்பட்ட விஷயங்கள் . "** [1] என்று குறிப்பிடுவர்.*

*பித்தன் என்னும் தலைப்பின் அவசியத்தினைச் சொல்லும் கவிதை இங்கு கவனிக்கத் தக்கது.*

***"அம்பலம்***
***அவர்கள்***
***வேடங்களில்***
***வசிக்கிறார்கள்***
***அது அவர்களுக்கு***
***வசதியாக இருக்கிறது***
***வேடம் களைந்தால்***
***மேடை போய்விடும்***

***நான் அவர்களுடைய***
***அம்பலம்***
***கவனி!***
***அம்பலம்***
***என் மேடையல்ல***
***நடனம்***
***அதனால் தான் என்னைப்***
***பித்தன் என்கிறார்கள்***
***என்றான்."*** [2]

*என, உண்மை பேசினால் பலருக்கு பிடிப்பதில்லை. உடனே அவனுக்கு பித்தன் என்று முத்திரை பதித்து விடுவார்கள் என்று பித்தன் என்ற நூலின் தலைப்புப் பொருத்தம் அமைந்துள்ளது. பல உண்மைகளையும் கவிதை வரிகளால் நன்கு வடித்துள்ளார். சொற்கள் என்ற கற்கள் கொண்டு புதுக்கவிதையில் சிலை வடித்துள்ளார் என்றால் அது மிகையில்லை. இப்படிப்பட்ட உண்மைகள் நிறைந்த கவிதைகளைக் கொண்டிருப்பதுதான் இந்தப் பித்தன் கவிதைத் தொகுப்பு.*

***சமூகப்பார்வை***

*சமூகம் என்பது ஒவ்வொரு தனிமனிதரின் ஒழுக்கம், அகத்தூய்மை, பண்பாடு, கலாச்சாரம், படைப்புத்திறன், கலைத்திறன், அர்ப்பணிப்பு ஆகியவற்றின் பங்களிப்பில் கொண்டுள்ள கூட்டு உருவாக்கம். விலங்குகளுக்குக் கூட்டமே உண்டு; சமூகம், சமுதாயம் என்ற அமைப்பு அவ்வுலகில் இல்லை. சமூகம் என்பதற்குத் திரண்டது என்பது பொருள். பாலில் வெண்ணெய் திரள்வது போல மாந்தரிடையே சமூகம் உருவாகும்.*

***"தனிமனிதனாக இருக்கும் ஒருவன் சமுதாயப் பழக்க வழக்கங்களை ஏற்றுக் கொள்ளும்போது அம்மனிதர்களின் கூட்டுத் தொகுப்பு 'சமூகம்' என்று அழைக்கப்படுகிறது"*** [3]

*உயர்ந்த கருத்தின் அடிப்படையில் உருவாகும் சமூகங்கள் வையத்தை உய்விக்கும். இந்தியச் சமுதாயம் சிதறிக் கிடந்தது; மாநிலங்களாய்ப் பிரிந்து கிடந்தது; மதங்களால் போரிட்டுக் குலைந்தது. அடிமை இருளில் அறியாமைச் சேற்றில் புதைந்து கிடந்தது. அதனை ஒருமைப்படுத்த 'விடுதலை' என்னும் குறிக்கோள் தோன்றியது. இந்தியச் சமுதாயம் தோள்தட்டி ஆர்த்தது. விடுதலை பெற்றது. உரிமை வாழ்வு மலர்ந்தது.*

*புதுக்கவிதைகளில் சமூகப் பார்வை என்பது அண்மைக் காலத்தில் விரிவடைந்த பார்வையை உள்ளடக்கியுள்ளது. அவ்வகையில் அப்துல் ரகுமானின் பித்தன் கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகள் மேற்கண்ட கருத்தியலின் வழி இங்கு இனம் காணலாம்.*

***அவதாரமும் மூடநம்பிக்கையும்***

*பித்தன் கவிதைகளில் ஒன்று 'அவதாரம்'. இக்கவிதை மூட நம்பிக்கையினைத் தோலுரித்துக் காட்டுகிறது.*

***"எல்லோரும்***
***மலையின் மீது***
***ஏறிக்கொண்டிருந்தபோது***
***பித்தன் மட்டும்***
***கீழே***
***இறங்கிக் கொண்டிருந்தான்***
***'நீ ஏன்***
***இறங்கிக் கொண்டிருக்கிறாய்?'***
***என்று கேட்டேன்***

*'மேலே செல்லுவதற்காக'*
*என்றான்.*
*அவன் மேலும் சொன்னான்:*
*கீழே விழும்*
*விதைதான்*
*மேலே செல்கிறது.*
*ஏற்றம்*
*இறக்கத்தில்தான்*
*நீரை முகக்கிறது.*
*தராசில்*
*கனமான தட்டே*
*கீழே இறங்குகிறது.*
*அரியாசனத்தில்*
*ஏறுகிறவனுக்கல்ல;*
*இறங்குகிறவனுக்கே*
*இதிகாசம் கிடைக்கிறது*
*இறங்கும் மேகமே*
*பூமியின் தாகம் தீர்க்கிறது.*
*பறக்கும் போதல்ல;*
*அறுந்து விழுந்த பிறகே*
*பட்டத்திற்கு*
*அமைதி கிடைக்கிறது.*
*ஆரோகணத்தில் அல்ல,*
*அவரோகணத்தில்தான்*
*ஸ்வரங்கள்*
*கூட்டை அடைகின்றன.*
*இறங்குவது*
*பரவசம்;*
*அதனாலல்லவா*
*அருவி பாடுகிறது?*
*பறப்பவன்*
*முடியைக்*
*காணாமல் போகலாம்.*
*இறங்குபவன்*
*அடியைக்*
*கண்டுவிடுவான்.*
*பழுத்த கனியே*
*கீழே இறங்கும்.*
*மேலே என்பது*

***மேலே இருக்கிறது***
***என்பதுதான்***
***உங்கள்***
***பெரிய மூடநம்பிக்கை."*** [4]

*இந்த உலகத்தில் பெருவாரியான மக்கள் எதை உண்மையென்று , எதை பெருமை என்று நம்புகிறார்களோ அதையே மற்றவர்களும் நம்பி செல்வதால் உண்மையில் எது உண்மையானதென்று தெரியாத நிலை உருவாகிவிடுவதை இக்கவிதைத் தோலுரித்துக் காட்டுகிறது.*

*பணத்தில், பெருமையில், வர்க்கத்தில், சாதியில் மேலே இருப்பதுதான் மதிப்பானது என்று நினைக்கும் பெருவாரியான மக்களின் எண்ணத்தை இக்கவிதை தலைகீழாக்கிவிடுகிறது. அரியாசனத்தைத் துறந்த இராமனுக்குத்தான் பெருமை கிடைத்தது. கீழே விழுந்த விதைதான் மரமாக மேலே முளைக்கிறது .* ***பறக்கின்றவனால் உயரத்தின் அளவைக் கணிக்க முடியாமல் அல்லது முழுதான உயரத்தை எட்ட முடியாமல் போகலாம் . ஆனால் கீழே சென்றவன் அடியின் அளவைக் கண்டுவிடுவான் என்கிறார்*** *. மேலே என்பது மேலானது இல்லை என்றும் அப்படி நினைப்பது மூடத்தனம் என்றும் மிக அழகாகக் கூறுகிறார்.*

***மதமும் தேனீயும்***

*உலகத்தில் மனிதர்கள் பின்பற்றும் மதங்கள் பலவாக உள்ளன . ஒவ்வொரு மதமும் அதனைப் பின்பற்றுபவர்களுக்கு முக்கியத்துவம் உடையதாக இருக்கிறது . தங்களது மதமும் மொழியும் இனமும் இதுதான் உயர்ந்தது என்று ஒவ்வொருவரும் சொல்ல ஆரம்பித்துவிட்டால் அது பிரிவினைக்கும் பகைக்கும் வழிவகுக்கும் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்.* ***எல்லாவகையான மதமும் மனிதனின் வாழ்வை செம்மைப்படுத்துகிறது*** *என்பதை நாம் அறிந்து கொண்டால் இந்த உலகத்தில் மதத்தின் பெயரால சாதியின் பெயரால் யார் பிரிவினையை உண்டாக்கினாலும் அதன் உள் பொருளை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.*

***"மதவாதி***
***'என் தோட்டத்துப்***
***பூவில் மட்டும்தான்***
***தேன் இருக்கிறது'***
***என்கிறான்.***
***நானோ தேனீயாக இருக்கிறேன்'***
***பூக்களின் வேறுபாடுகளைத்***
***தேனீ***
***இலட்ச்சியம் செய்வதில்லை***
***எல்லாப் பூக்களிலும்***
***தேன் உண்டு***
***என்பதும்***
***தேன் என்பது ஒன்றுதான்***
***என்பதும்***
***தேனீக்கு மட்டுமே***
***தெரிகிறது.***
***ஒரு பூவின் தேன்***
***தேனீக்குப் போதாது."*** [5]

*என்னும் வரிகளில் , சிறந்த வாழ்விற்கான தேடலை தேனீயைப்போல் , தேன் எங்கிருந்தாலும் உண்டு சேமித்து*

*வைப்பதைப்போல மனிதன் ஒவ்வொரு மதத்திலும் இனத்திலும் உள்ளவற்றைத் தேடி அடைய வேண்டும் என்பதை இக்கவிதை வரிகளில் உணர்த்துகிறார் அப்துல்ரகுமான்.*

***வாழ்க்கைக்கு கைக் கொடுத்தவர்கள்- தீக்குச்சி***

*தனிமனிதனின் வாழ்க்கைக்கு உதவியவர்களை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை . அல்லது அப்படிப்பட்டவர்களை நாம் மதிப்பதே இல்லை . இந்த நிலையில் நாம் இந்தளவுக்கு வாழ்வதற்கான காரணமே அவர்கள் தாம் என்பதைப் புரிய வைத்திட தீக்குச்சி என்பதைக்கொண்டு அப்துல் ரகுமான் அவர்கள் இக்கவிதையில் உணர்த்திவிடுகிறார்.*

***"தீக்குச்சி***
***விளக்கை ஏற்றியது.***
***எல்லோரும்***
***விளக்கை வணங்கினார்கள்.***
***பித்தன்***
***கீழே எறியப்பட்ட***
***தீக்குச்சியை வணங்கினான்.***
***'ஏன் தீக்குச்சியை***
***வணங்குகிறாய்?'***
***என்று கேட்டேன்.***
***'ஏற்றப்பட்டதை விட***
***ஏற்றிவைத்தது***
***உயர்ந்ததல்லவா?' என்றேன்.***
***அவன் மேலும் சொன்னான்;***
***தீக்குச்சி தான்***
***பிரசவிக்கிறது.***
***விளக்கோ***
***வெறும் தொட்டில்***
***தீக்குச்சி தான்***
***எழுதுகிறது.***
***விளக்கோ***
***வெறும் காகிதம்"*** [6]

*என்று, தொடரும் கவிதை வரிகளில் தீக்குச்சி கைம்மாறு கருதாது தனது உதவிகளைச் செய்யும் உயர்ந்த மனப்பக்குவத்தைத் தொட்டுக் காட்டுகிறது . மனிதர்கள் வருகிறார்கள் (பிறப்பு), போகிறார்கள் (இறப்பு) ஆனால் இங்கு நிலைபெற்று இருப்பது இத்தகைய உயர்ந்த செயல்கள்தான் . அதனால்தான் தீக்குச்சிக்கு இருக்கும் உயர்ந்த தன்மை காலகாலமாக பேசப்பட வேண்டியதாக இருக்கிறது என கவிதை மறைமுகமாக நமக்கு உணர்த்துகிறது எனலாம்*

***வேற்றுமை பாராட்டாத குழந்தைகள்- புத்தகம்***

*குழந்தைகள், யாருக்குமே தமது அன்பை வெளிப்படையாக தெரிவிப்பவர்கள். உலகம் கற்பித்து வைத்திருக்கிற எந்த அளவீடுகளையும் குழந்தைகள் அறிவது இல்லை . இயற்கை எப்படி எல்லா மனிதர்களுக்கும் தனது செல்வத்தைப் பாகுபாடு இன்றித் தருகிறதோ அதைப்போல குழந்தைகளும் எந்த வேற்றுமையையும் பாராட்டுவதில்லை . அவர்கள் இயற்கையோடு இணைந்தவர்களாக இருக்கிறார்கள்.*

***"புத்தகங்களே!***

*சமர்த்தாயிருங்கள்.*
*குழந்தைகளைக்*
*கிழித்து விடாதீர்கள் என்றான்*
*அவன் மேலும் சொன்னான்;*
*குழந்தைகளே*
*பாடப் புத்தகங்களாக*
*இருக்கிறார்கள்.*
*அவர்கள் கையில் ஏன்*
*காகிதக் குப்பைகளைத்*
*தருகிறீர்கள்?*
*உங்கள் புத்தகங்கள்*
*கண்களைத் திறப்பதில்லை*
*ஊற்றுக் கண்களைத்*
*தூர்த்து விடுகின்றன.*
*காகித ஓடங்களை*
*நம்பி இருப்பவர்களே!*
*நீங்கள் எப்படி*
*அக்கரை போய்ச் சேர்வீர்கள்?*
*இதோ*
*இரவு பகல் என்ற ஏடுகள்*
*உங்களுக்காகவே*
*புரளுகின்றன.*
*நீங்களோ அவற்றைப்*
*படிப்பதில்லை*
*இதோ!*
*ஊண்மையான*
*உயிர் மெய் எழுத்துக்கள்*
*உங்கள் முன் நடனமாடுகின்றன*
*நீங்களோ அவற்றைக்*
*கற்றுக் கொள்வதில்லை*
*ஒவ்வொரு பூவும்*
*பாடப் புத்தகமாக இருப்பதை*
*நீங்கள் அறிவதில்லை*
*நீங்கள்*
*நட்சத்திரங்களைப் படிக்கக்*
*கற்றிருந்தால்*
*உச்சரிக்க முடியாத*
*எழுத்துக்களில்*
*அதிகமான அர்த்தம் இருப்பதை*

***அறிந்திருப்பீர்கள்***
***நீங்கள்***
***மின்னலின் வாக்கியங்களை***
***வாசிக்க முடிந்திருந்தால்***
***ஒளியின் ரகசியத்தை***
***அறிந்திருப்பீர்கள்***
***உங்களுக்குக்***
***கண்ணீர்த் துளிகளைப்***
***படிக்கத் தெரிந்திருந்தால்***
***நீங்கள்***
***மனிதனின் சாரத்தை***
***அறிந்திருப்பீர்கள்***
***எழுத்துக்களால் அல்ல***
***காயங்களால் கற்பதே***
***கல்வி என்பதை***
***அறிந்து கொள்ளுங்கள்***
***உங்கள் புத்தகங்கள்***
***விளக்குகளாக இருக்கின்றன***
***சூரியனைக் காண***
***விளக்குகள்***
***தேவைப்படுவதில்லை"*** [7]

*உலகத்தைப் படிக்க, வாழ்க்கையைப் படிக்க, வாழும் வாழ்வைச் சிறப்பிக்க புத்தகங்கள் உதவுவதைவிட, புத்தகங்களைப் படிப்பதைவிட குழந்தைகளைப் படிப்பதே சிறந்ததாகும்.* ***குழந்தைகளிடம்தான் எதிர்பார்ப்பற்ற ஒரு வாழ்வை நாம் வாழ்ந்து அனுபவிக்க முடியும்.*** *ஏழைகளின் சிரிப்பில்தான் இறைவனைக் காணமுடியும் என்பதைவிட குழந்தைகளின் ஒவ்வொரு துடிப்பிலும் இறைவனைக் காண முடியும். இறைவனைப் பற்றி நம்பிக்கை இல்லாதவர்களுக்கு இயற்கை என, இக்கவிதை வரிகளானது குழந்தையின் கள்ளங்கபடமற்றச் சிரிப்பைப் போல் வாழ்வை அனுபவிக்கச் சொல்கிறது. மனதில் குப்பைத் தொட்டியாய் எல்லாவற்றையும் போட்டு துன்புறுவதை விடுத்து, குழந்தைகளைப்போல் எதுவுமற்று இருக்கச் சொல்கிறது.*

***துன்பத்தை ஏற்றுக்கொள்ளும் பக்குவம்- காயம்***

*மனிதர்கள் துன்பத்தை ஏற்றுக்கொள்ளும் போதுதான் பக்குவமடைகிறார்கள். துன்பமே வாழ்க்கையின் பொருளினைச் சொல்லித் தருகிறது. இன்பத்தை மட்டுமே ஒருவன் நுகர்வானேயானால் அது வாழ்க்கையின் முழுமையாகாது. மனதின் உடலின் ஆற்றலுக்கும் வழி வகுக்காது. அது தோல்வியில் துன்பத்தில் துவளும் தன்மையை - வாழ முடியாத கோபத்தை - இதனால் பகையுணர்ச்சியைத் தருவதாகிவிடும்.* ***துன்பம் ஞானம் போல வாழ்க்கையின் விதிகளை மிக எளிமையாகக் கற்றுத் தருகிறது*** *இதனை காயம் என்னும் தலைப்பில் தருகிறார் அப்துல்ரகுமான்.*

***"காயங்களை***
***ரசித்துக் கொண்டிருக்கிறேன்***
***இருட்டின் உடலில்***
***இந்த***
***நட்சத்திரக் காயங்கள்***

***எவ்வளவு அழகாக***
***இருக்கின்றன! என்றான்.***
***அவன் மேலும் சொன்னான்;***
***உங்கள் இதயங்களைக்***
***காயங்களால்***
***அலங்ககரியுங்கள்.***
***காயங்களால்தான்***
***நீங்கள்***
***பிரகாசிப்பீர்கள்.***
***காயம்படும் ஓலைதான்***
***சுவடியாகிறது.***
***காயம்படும் கல்தான்***
***சிலையாகிறது.***
***காயம்படும் மூங்கிதான்***
***கானம் பாடுகிறது.***
***பூக்களும் கூடக்***
***காயங்களே.***
***நினைவுகள் என்பவை***
***உங்கள்***
***ஆறாத காயங்களிலிருந்து***
***வடியும் ரத்தம்தான்.***
***அனுபவங்கள்***
***காயங்களாலேயே***
***கையெழுத்திடுகின்றன.***
***காயங்கள்***
***உணர்ச்சிகளின்***
***காலடிச் சுவடுகள்.***
***வாழ்க்கை***
***அணிவிக்கும்***
***பதக்கங்கள்."*** [8]

*என்னும் வரிகள், பகலும் இருளும் எப்படிஇயற்கையைப் புதுப்பிக்கிறதோ அதைப்போல* ***வாழ்க்கையில் இன்பமும் துன்பமுமே மனிதனைப் புதுப்பிக்கிறது*** *என்பதனைச் சொல்லுகின்றது.*

***பொய்யும் மெய்யும் - ஆடை***

*மெய்க்கு எந்த அலங்காரமும் தேவையில்லை . பொய்க்குத்தான் அலங்காரம் தேவைப்படும் என்பது ஆடை என்ற தலைப்பின் வழியாகச் சொல்லப்படுகிறது.*

***"பொய்க்குத்தான்***
***ஆடை தேவை;***
***'மெய்'க்குத்***
***தேவையில்லை***

***உங்கள் ஆடை
விலக்கப்பட்ட கனியைத்
தின்ற பாவத்தால்
நெய்யப்பட்டதல்லவா?
உங்கள் ஆடை
இறந்துபோன கள்ளமின்மைக்குப்
போர்த்திய
சவக்கொடி அல்லவா?
பூக்களும் பறவைகளும்
ஆடை அணிவதில்லையே?
நீங்கள்
ஆபாசமானீர்கள்;
அதனால் உங்களை
ஆடையால் மறைத்தீர்கள்.
ஆடையை
முகவரி ஆக்கியபோது
நீங்கள் காணாமல் போனீர்கள்.
உங்கள் ஆடைகளை
ஒப்பனை அறையிலிருந்தே
பொறுக்கிக் கொள்கிறீர்கள்.
தேங்கிய நீர்தான்
பாசியை
உடுத்திக்கொள்கிறது.
அணைந்த நெருப்புத்தான்
சாம்பலை
அணிந்துகொள்கிறது."*** [9]

*மனிதனின் இன்றைய எதார்த்த வாழ்க்கையில் அவன் முழுமையான உண்மை எது என்பதைத் தேடுவதை விட்டுவிட்டான். அதற்கான காரணம் பொய்மைகள் மிகுந்த அலங்காரத்துடன் அவனைச் சுற்றி இருப்பதை அவன் உண்மை என்று நம்ப வைக்கப்படுகிறான் என்பதை நுட்பமாகப் பதிவு செய்கிறார் . அத்துடன்* **மெய் என்பதற்கு அவ்வித ஒப்பனை தேவையில்லை** *என்பதுடன் அதனைக் கண்டையும் வழி மிக எளிமியயானது , ஒப்பனை என்னும் ஆடையைத் துறப்பதுதான் என்பதையும் சுட்டிக் காட்டுகிறார் அப்துல்ரகுமான்.*

***முடிவுரை***

*சமூகம் (* Society) *என்பது ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவைக் குறிக்கும், ஒரேமாதிரியான புவியியல் நிலப்பகுதியில் வாழ்கின்ற ஒரு பெரிய மக்கள் குழுவையும் சமூகம் எனலாம். புலன்களால் உணரப்படும் உலகம் மனித அனுபவத்தின் ஒரு சிறு பகுதியே. எனவே உலகைப் புரிந்து கொள்வதற்கு, மனிதத் தொடர்புகளைப் பண்பியல் (*abstract) *அடிப்படையில் (அதாவது, சமூகம் என்பதன் மூலம்) உணர்ந்துகொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு சமுதாயம் என்ற பொருளில் பயன்படுத்தப்படும்போது, சமுதாயம் என்பது செயல்பாட்டு உறவுகளின் எல்லைகளால் வரையறுக்கப்பட்ட தனிநபர்களால் உருவாக்கப்படும் ஒரு அமைப்பாகும். தேசிய அல்லது கலாச்சார அடையாளங்கள்,*

*சமூக ஒற்றுமை, மொழி, அல்லது படிநிலை அமைப்பு போன்ற சிறப்பியல்புகளை இவ்வமைப்பு கொண்டிருக்கும்.*

*புதுக்கவிதைகளில் சமூகப் பார்வை என்பது அண்மைக் காலத்தில் விரிவடைந்த பார்வையை உள்ளடக்கியுள்ளது. இந்த உலகத்தில் பெருவாரியான மக்கள் எதை உண்மையென்று , எதை பெருமை என்று நம்புகிறார்களோ அதையே மற்றவர்களும் நம்பி செல்வதால் உண்மையில் எது உண்மையானதென்று தெரியாத நிலை உருவாகிவிடுவதை இக்கவிதைத் தோலுரித்துக் காட்டுகிறது . சிறந்த வாழ்விற்கான தேடலை தேனீயைப்போல் , தேன் எங்கிருந்தாலும் உண்டு சேமித்து வைப்பதைப்போல மனிதன் ஒவ்வொரு மதத்திலும் இனத்திலும் உள்ளவற்றைத் தேடி அடைய வேண்டும் என்பதை தமது கவிதை வரிகளில் உணர்த்துகிறார் அப்துல்ரகுமான்.*

**குறிப்புகள்**

*[1] அப்துல் ரகுமான், பித்தன், ப.8*

*[2] அப்துல் ரகுமான், பித்தன், ப.49*

*[3] ஆ. ஜெகதீசன், இலக்கியத்தில் மனித உரிமைக் கோட்பாடுகள், ப. 14.*

*[4] அப்துல்ரகுமான், பித்தன், பக். 49-51.*

*[5] அப்துல்ரகுமான், மு.நூ, பக்.34-35.*

*[6] மேலது, ப.78.*

*[7] மேலது, பக்.82-84.*

*[8] மேலது, பக்.91-92.*

*[9] மேலது, பக்.19-20.*